பரிபாடல் கவிதையாக்கத்தில் உரிச்சொற்கள்

The Usage of Adjectives to form Poetry Paripadal

முனைவர் சி.சங்கீதா, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, கலசலிங்கம் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், கிருஷ்ணன் கோயில்.

Dr.C.Sangeetha, Assistant Professor, Department of Tamil, Kalasalingam Academy of Research and Education, Krishnan Kovil.

DOI : 10.5281/zenodo.4662255

Abstract :

In Ettuthogai Agam and Puram has combined together and used in Paripadal. This one is especially called as "Oongu Paripadal". It is mainly composed of Adaigal. The growth of adjectives is known as Adaigal. This adjectives can be used to illustrate the contents in poetry. Tholkkapiyar used this adjectives as a device to demonstrate the adverbs of adjectives in Paripadal. These adjectives were identified in the texts and explained how it was used and quoted in Paripadal. This Paper shows that how single Adaigal and Adiadaigal were used to form a Paripadal poetry.

ஆய்வுச்சுருக்கம்:

சங்க இலக்கியங்களில் அகமும் புறமும் கலந்த நூல் பரிபாடல். ஓங்கு பரிபாடல் என்று சிறப்பித்து அழைக்கப்படுகிறது. பரிபாடல் முழுக்க அடைகள் நிறைந்து காணப்படுகின்றன. உரிச்சொற்களின் வளர்ச்சியே அடைகள் ஆகும். இவ்வுரிச் சொற்கள் தான் வர்ணனைகளாக காணப்படுகின்றன. தொல்காப்பியர் கூறிய உரிச்சொற்கள் பரிபாடலில் இடம் பெற்றுள்ள விதம் மற்றும் உரிச்சொற் பதிலிகள் முதலியவ இனம் காணப்பட்டு கன அவை கவிதையாக்கத்திற்குத் துணை புரியும் பாங்கு எடுத்துரைக்கப்படுக்கிறது. உரிச்சொற் பதிலிகள் என்பது உரிச்சொற்களின் பொருளைப் பதிலிகளாக எடுத்துக்கொள்ளப்படுள்ளது. மேலும் ஒரு சொல் அடைகள், அடியடைகள் முதலியவற்றைக் கண்டறிந்து அவை பரிபாடல் கவிதையாக்கத்திற்குத் துணைபுரிவதை இவ்வாய்வுக் கட்டுரை எடுத்துரைக்கிறது.

Keywords: பரிபாடல், கவிதையாக்கம், உரிச்சொற்கள், உரிச்சொல் பதிலிகள், ஒரு சொல் அடைகள், அடிஅடைகள்

முன்னுரை

‘ஓங்கு பரிபாடல்’ என்று சிறப்பித்து அழைக்கப்படும் பரிபாடல் எட்டுத்தொகையில் அகமும் புறமும் சார்ந்த நூல். இப்பரிபாடலானது அடி எண்ணிக்கை அதிகம் கொண்டிருப்பதால் இவற்றுள் 8 ஆவது பாடல் மட்டும் சான்று காட்டப்படுகிறது. செவ்வேள் பற்றிய இப்பாடலின் ஆசிரியர் நல்லந்துவனார் ஆவார். தொல்காப்பியர் கூறிய உரிச்சொற்கள், உரிச்சொற் பதிலிகள், ஒரு சொல் அடைகள், அடியடைகள் முதலியவற்றைக் கண்டறிந்து அவை பரிபாடல் கவிதையாக்கத்திற்கு மிகுந்த துணைபுரிகின்றது என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

உரிச்சொற்கள்

பரிபாடலில், நனி வாரணம் (20) என்பதில் நனி என்ற உரிச்சொல்லும், கேழ்த்து அன்ன இனம் வீழ்தும்பி (22) என்பதில் கேழ் என்பது கெழு என்ற உரிச்சொல்லிற்கும், நன்று அவிழ் பல் பலர் (26) என்பதில் நன்று என்ற உரிச்சொல்லும், கம்பலைத்தன்று (37) என்பதில் கம்பலை என்ற உரிச்சொல்லும், பணைத்தோள் (39) என்பதில் பணை என்ற உரிச்சொல்லும், மாலைக்கு மாலை (49) என்பதில் மாலை என்ற உரிச்சொல்லும், துனியல் நனி (55) என்பதில் நனி என்ற உரிச்சொல்லும் மணலின் கெழுவும் (63) என்பதில் கெழு என்ற உரிச்சொல்லும், சீர்சூள் (71) என்பதில் சீர்த்தி என்ற உரிச்சொல்லும், கயவாய நெய்தல் (74) என்பதில் கய என்ற உரிச்சொல்லும், வாள்நுதல் (75), என்பதில் வாள் என்ற உரிச்சொல்லும், நனவு அன்று (77) என்பதில் நனவு என்ற உரிச்சொல்லும், நளிமணல் (94) என்பதில் நளி என்ற உரிச்சொல்லும், நனி மலர்ப் பெருஅடி (95) என்பதில் நனி என்ற உரிச்சொல்லும், இசை முழவமும் (99) என்பதில் இசை என்ற உரிச்சொல்லும், நளிபுனல் (94) என்பதில் நளி என்ற உரிச்சொல்லும், ஐ அமர் வருக (108) என்பதில் ஐ என்ற உரிச்சொல்லும், துஞ்சாக் கம்பலை (111) என்பதில் கம்பலை என்ற உரிச்சொல்லும், பாஅய் எழு பாவையர் (112) என்பதில் பாய்தல் என்ற உரிச்சொல்லும், கயமலர் (114) என்பதில் கய என்ற உரிச்சொல்லும், ஆய் இதழ் (113) என்பதில் ஆய்தல் என்ற உரிச்சொல்லும், செவ்வாய் (116) என்பதில் என்பதில் சிவப்பு என்ற உரிச்சொல்லும், கூர் எயிற்றார் (118) என்பதில் கூர் என்பதில் கூர்ப்பு என்ற உரிச்சொல்லும், செல்லல் தீர்ப்ப (123) என்பதில் செல்லல் என்ற உரிச்சொல்லும், கடி நகர் (126) என்பதில் கடி என்ற உரிச்சொல்லும், உறு செல்வம் (128) என்பதில் உறு என்ற உரிச்சொல்லும் மொத்தம் 25 உரிச்சொற்கள் இடம் பெற்றுள்ளன.

பதிலீட்டு உரிச்சொற்கள்

பாடல்களில், வீழ்தும்பி (23) என்பதில் வீழ் என்பது விரும்பும் என்ற பொருளில் வந்து கவர்வு என்ற உரிச்சொல்லிற்கும் பல் மலர் (26) என்பதில் உள்ள பல் என்பது பல என்ற பொருளில் தட என்ற உரிச்சொல்லிற்கும் ஆர்ப்பு எழ (3) என்பதில் உள்ள ஆர்ப்பு என்பது முழக்கம் என்ற பொருளில் 9 இசை உரிச்சொற்களுக்கும் இரும்உரும் (5) என்பதில் உள்ள இரும் என்பது பெரிய என்ற பொருளில் தட என்ற உரிச்சொல்லிற்கும் அதிரதிர (34) என்பதில் உள்ள அதிர என்பது முழக்கம் என்ற பொருளில் 9 இசையுரிச்சொற்களுக்கும் தொழிதிமுரல்வு (36) என்பதில் தொழுதி என்பது கூட்டம் என்ற பொருளில் கருவி என்ற உரிச்சொல்லிற்கும் முரல்வு என்பது இசையைக் குறிப்பதால் 9 இசையுரிச்சொற்களுக்கும் நெடுமென் பணைத்தொள் (39) என்பதில் உள்ள நெடு என்பது நீண்ட என்ற பொருளில் வார்தல், போகல் முதலிய உரிச்சொற்களுக்கும் அகலத்து அகலா (43) அகலம் என்பது மார்பகத்தைக் குறித்து வியல் என்ற உரிச்சொல்லிற்கும் நகைமலர் (48) என்பதில் நகை என்பது ஒளி என்ற பொருளில் வாள் என்ற உரிச்சொல்லிற்கும் இரும்பொழிலும் (51) என்பதில் உள்ள இரும் என்பது பெரிய என்ற பொருளில் தட என்ற உரிச்சொல்லிற்கும் துனியல் நனி நீ நின் சூள் (55) என்பதில் உள்ள துனியல் என்பது வருத்தம் என்ற பொருளில் தா

என்ற உரிச்சொல்லிற்கும் இருள்மை ஈர் உண்கண் (59) என்பதில் உள்ள இருள் என்பது கறுப்பு என்ற பொருளில் கறுப்பு என்ற உரிச்சொல்லிற்கும் இலங்கு இழை (59) என்பதில் இலங்கு என்பது ஒளிர்கின்ற என்ற பொருளில் வாள் என்ற உரிச்சொல்லிற்கும் வேல் நிழல் (67) என்பதில் உள்ள வேல் என்பது ஒளி என்ற பொருளில் வாள் என்ற உரிச்சொல்லிற்கும் மிக ஏற்றுதும் மலர் (79) என்பதில் மிக என்பது நிறைய, மிகுதி என்ற பொருளில் தட, தவ, நனி, உறு, கழ, முதலிய உரிச்சொற்களுக்கும் நயவருதல் (79) என்பதில் நய என்பது விருப்பம் என்ற பொருளில் கவர்வு என்ற உரிச்சொல்லிற்கும் இருந்தள் (89) என்பதில் உள்ள இருஞ் என்பது விகுதி என்ற பொருளில் கடி என்ற உரிச்சொல்லிற்கும் சேண் சிமை (90) என்பதில் சேண் என்பது உயர்ந்த என்ற பொருளில் புரை என்ற உரிச்சொல்லிற்கும் பெருவழி (95) என்பதில் உள்ள பெரு என்பது பெரிய என்ற பொருளில் தட பரிய வானம் (129) என்பதில் பரிய என்பது வருத்தம் என்ற பொருளில் தா என்ற உரிச்சொல்லிற்கும் என மொத்தம் 22 பதிலீட்டு உரிச்சொற்கள் இடம்பெற்றுக் கவிதையாக்கத்திற்குப் புனைவியலைக் கொடுக்கின்றன என்பதைத் தெளியலாம்.

ஒரு சொல் அடைகள்

இப்பாடல்களில் ஒரு சொல் அடைகளாகப் புள்மிசைக் கொடியோடியோனும் (2), புங்கவம் ஊர்வோனும் (2), மலர்மிசை முதல்வனும் (3), உலகு இருள் அகற்றிய பதின்மரும் (4), மருந்து உரை இருவரும் (5), திருந்து நூல் எண்மரும் (5), ஆதிரை முதல்வனின் (6) நாதர் பன்னொருவரும் (7), நன்திசை காப்போரும் (7), முதுமொழி (9), விழுத்தவ முதல்வரும் (9), பரங்குன்று (11), இமயக்குன்றம் (11), இமயக்குன்றினில் (12), நிரை இதழ்த் தாமரை (13), விளங்கு இணர் ஊழா (14), அருவி தாழ் மாலைச் சுனை (16), காரின் குரல் (18), குரல் கேட்ட கோழி குன்று அதிரக் கூவ (19) மத நனி வாரணம் (20), மலை முழை (21), ஏழ்புழை (22), ஐம்புழை (22), யாழ் இசை (22), வீழ்தும்பி வண்டு (23), சுனை மலர (23), கொன்றை கொடி (24), இணர் ஊழ்ப்ப (24), கொடி மலர் (24), மலர் காந்தள் வாய் நாற (25), பல் மலர் (26), ஒளிர் வேலோய் (29), மன்றல் கலந்த மணி முரசின் (30), காலொடு மங்கிய கலிழ் கடலென (31), மால் கடல் (32), மழைக்குரல் (32), இரும் உருமென (33), தொழுதி முரல்வு (36), காதல் மூதூர் மதில் (37), வடுவகிர் வென்ற கண் (38), மாந்தளிர் மேனி (38), நெடுமென் பணைத்தொள் (39), குறுந்தொடி மகளிர் (39), ஆராக்காமம் (40), ஆர் பொழிற் பாயல் (40), முற்றாக் காதல் (42), அலர் ஞெமல் மகன்றில் (44), தண் பரங்குன்று (46), பனிமலர் (48), நகை மலர் (48), மாலைக்கு மாலை (49), இரும்பொழிலும் (51), பனிபொழி தூரலும் (52), துனியல் மலருண் கண் (53), நனி நீ நின் சூள் (55), இருள்மை ஈர் உண்கண் (59), இலங்கு இழை (54), வருபுனல் (61), வையை மணல் தொட்டேன் (61), தண் பரங்குன்றத்து (62), ஏழ் உலகும் (64), ஆளி திரு வரை (64), முருகு சூள் (65), விறல் வெய்யோன் (67), ஊர் மயில் (67), வேல் நிழல் (67), குறவன் மகள் (69), சீர் சூள் (71), நேரிழாய் (73), கயவாய நெய்தல் (74), கமழ்முகை (74), மணநகை (74), நயவரு நறவு இதழ் (75), மாதர் உண்கண் (75), வாள்நுதல் (75), முகை முல்லை

(76), எழில் முத்து (76), வெண்பல் (76), தண் பரங்குன்று (82), பருவத்துப்பல் மாண் (85), எருமை இருந்தோட்டி (86), எள்ளீயும் காளை (86), தூங்குமணி (88), நிரைவளை (89), இருஞ்கள் (89), வளி பொரு கேண் சிமை வரையகத்தான் (90), குளிர் பொய்கை (93), மருதம் நளி மணல் (94), நனி மலர் (95), பெருஅடி (95), சீறடியவர் (96), வேறுபடு சாந்தமும் (97), வீறுபடு புகையும் (97), ஆறுசெல் வளியின் (98), அவியா விளக்கமும் (98), நாறு கமழ் வீயும் (99), இசை முழவமும் (99), பிணிமுகம் (101), நளிபுனல் வையை (104), வருபுனல் (105), கருவயிறு (106), மஞ்சு ஆடு மலை முழக்கும் (110), துஞ்சாக் கம்பலை (111), பைஞ்சுனை (112), பாஅய் எழு பாவையர் (112), ஆய் இதழ் உண்கண் (113), அலர் முகத்தாமரை (113), தாட் தாமரை (114), கயமலர் (114), கொங்கைக் கயமுகை (115), செவ்வாய் ஆம்பல் (116), செல்நீர்த் தாமரை (116), புனற் தாமரையொடு (117), கூர் எயிற்றார் (118), குவி முலை (118), அமிர்த பானம் (120), உரிமை மாக்கள் (121), செந்தளிர் மேனியார் (123), செல்லல் தீர்ப்ப (123), உடம்புணர் காதலரும் (125), கடம்பு அமர் செல்வன் (126), கடிநகர் (126), மாசிளேள் (127), மறுமிடற்று அண்ணற்கு (127), நெறி நீர் அருவி (128), அசும்பு உறு செல்வம் (128), மண்பரிய வானம் (129), தண் பரங்குன்றம் (130) முதலிய 128 ஒரு சொல் அடைகள் இப்பாடலுள் பயின்று பரிபாடல் கவிதையாக்கப் புனைவியலுக்குப் பெரும் பங்காற்றும் தன்மை காணப்பெறுகின்றது.

அடியடைகள்

செவ்வேள் பற்றிய 8 ஆவது பாடலானது, திருப்பரங்குன்றின் சிறப்புகள், அக்குன்றிலுள்ள தலைவன், தலைவி, தோழியின் உரையாடல்கள் முதலியவையும், இறுதியாக, பரங்குன்றின் மீது வாழும் முருகனை வணங்குவதாகவும் இப்பாடல் அமைகிறது.

1 – 46 அடிகள் திருப்பரங்குன்றின் சிறப்பிற்கு அடைகளாக வந்துள்ளன.

“மண்மிசை அவிழ்துழாய் மலர்தரு செல்வத்துப்
புள்மிசைக் கொடியோனும் புங்கவம் ஊர்வோனும்
மலர்மிசை முதல்வனும் மற்று அவனிடைத் தோன்றி
உலகுஇருள் அகற்றிய பதின்மரும் இருவரும்
மருந்துஉரை இருவரும், திருந்து நூல் எண்மரும்
ஆதிரை முதல்வனின் கிளந்த
நாதர் பன்டினாருவரும், நன் திசை காப்பொரும்
யாவரும், பிறரும் அமரரும், அவுணரும்,
மேஅரு முதுமொழி விழுத்தவ முதல்வரும்
பற்றாகின்று, நின் காரணமாக
பரங்குன்று இமயக் குன்றம் நிகர்க்கும்” (பரி. 1 - 11)

இவ்அடிகளில் சிவபெருமான், பரமன், ஆதித்தர், அஸ்வினி தேவர் இருவர், முதலிய பல்வேறு தவமுனிவர்களும் தங்குவதற்குக் காரணமான முருகன் வீற்றிருக்கும் திருப்பரங்குன்றம் இமயமலை போன்றது என்பதைக் குறிக்கிறது. திருப்பரங்குன்றம் இமயமலையை ஒத்தது என்பதற்கு இவ்வடிகள் அடைகளாக வந்துள்ளன.

"நின் ஈன்ற நிரை இதழ்த் தாமரை
மின் ஈன்ற விளங்கு இணர் ஊழா
ஒரு நிலைப் பொய்கையொடு ஓக்கும் - நின்குன்றின்
அருவி தாழ் மாலைச்சுனை" (பரி. 12 - 16)

திருப்பரங்குன்றின் மீது உள்ள சுனை, இமயமலையின் கண்ணுள்ள சுனைகளை விட சிறப்பு மிக்கது என்பதற்கும், சரவணப் பொய்கை என்றும் வற்றாதது என்பதற்கும் இவ்வடிகள் அடைகளாக வந்துள்ளன.

"முதல்வ! நின் யானை முழக்கம் கேட்ட
கதியிற்றே காரின் குரல்
குரல் கேட்ட கோழி குன்று அதிரக்கூவ
மதநனி வாரணம் மாறுமாறு அதிர்ப்ப
எதிர்குதிர் ஆகின்றது, மலைமுழை" (பரி. 17 – 21)

திருப்பரங்குன்றத்தில் யானையின் பிளிற்றொலி முழக்கம், இடியொலி, சேவற்கோழியின் குரல்கள் ஒலித்தன என்பன போன்று குன்றில் பல்வேறு ஒலிகள் எதிரொலியை எழுப்பின என்பதற்கு அடைகளாக வந்துள்ளன.

"ஏழ் புழை ஐம் புழை யாழ் இசை கேழ்த்து அன்ன இனம்
வீழ் தும்பி வண்டொடு மிஙிறு ஆர்ப்ப, சுனை மலர,
கொன்றை கொடி இணர் ஊழ்ப்ப, கொடி மலர்
மன்றல மலர, மலர் காந்தள் வாய் நாற
நன்று அவிழ் பல் மலர் நாற, நறை பனிப்ப
தென்றல் அசைவரூஉம் செம்மற்றே – அமே! நின்
குன்றத்தான் கூடல் வரவு" (பரி. 22 - 28)

ஒரு துளையுடைய குழல், ஐந்து துளையுடைய குழல்களின் இசையைப் போன்ற தும்பி, வண்டு, மிஙிறு முதலியவை இனிய இசையை முழக்கின. பல்வேறு வகையான மரங்களில் மலர்கள் மலர்ந்தன. மலர்களின் மணத்தோடு தென்றல் காற்றும் வீசக் கூடியது. மதுரை நகரின் வழி இப்படிப்பட்ட சிறப்பிற்குரியது. மதுரை நகரின் அடிக்கு இவ்வடிகள் அடைகளாக வந்துள்ளன.

"குன்றம் உடைத்த ஒளிர் வேலோய்! கூடல்
மன்றல் கலந்தமணி முரசின் ஆர்ப்பு எழ

காலொடு மயங்கிய கலிழ் கடலென

மால்கடல் குடிக்கும் மழைக் குரலென

ஏறு அதிர்க்கும் இந்திரன் இரும் உரும்மென

மன்றல் அதிரதிர மாறுமாறு அதிர்க்கும் - நின்

குன்றம் குமுறிய உரை” (பரி. 29 - 35)

முதலிய அடிகளும், 30 – 35 முதலிய அடிகளும் மதுரை மாநகரில், முரசின் ஒலி, கடல் அலைகளின் ஒலிகள், மேகத்தின் முழக்கம், இந்திரனுடைய இடியேறு முழக்கம், பெரிய இடியின் ஒலி முதலிய ஒலிகள் ஒலிக்கின்ற திருப்பரங்குன்ற மலையாகும். மேலும், 29 ஆவது அடியானது கிரௌஞ்சம் என்னும் மலையினை உடைத்த ஒளி மிக்க வேற்படையினை உடைய முருகன் என்று முருகனின் வீரத்திற்கு அடையாக வந்துள்ளது.

“தூது ஏய வண்டின் தொழுதி முரல்வு அவர்

காதல் மூதூர் மதில் கம்பலைத்தன்று

வடு வகிர் வென்ற கண், மாந்தளிர்மேனி

நெடுமென் பணைத் தொள், குறுந்தொடி மகளிர்

ஆராக் காமம், ஆர் பொழிற் பாயல்

வரையகத்து இயைக்கும் வரையா நுகர்ச்சி

முடியா நுகர்ச்சி முற்றாக காதல்

அடியோர் மைந்தர் அகலத்து அகலா

அலர் ஞெமல் மகன்றில் நன்னர்ப் புணர்ச்சி

புலரா மகிழ், மறப்பு அறியாது நக்கும்

சிறப்பிற்றெ – தண் பரங்குன்று” (பரி. 36 - 46)

தலைவர்களைப் பிரிந்து வாடும் தலைவியரால் தூதாக ஏவி விடப்பட்ட வண்டின் கூட்டம் தூதாகச் சென்று பின் தலைவர்களுடனே மீண்டது. அந்த வண்டுகள் எழுப்பிய ஓசை, தலைவியரின் காதல் மிகுதியை மதில் சூழ்ந்த பழமை மிக்க மதுரை நகரில் உள்ளவர்கள் அறிந்து கொள்வதற்கும் காரணமான ஆரவாரத்தினை உண்டாக்கியது. மகளிரின் வருணனைகள், மலைச்சாரலில் தலைவன் தலைவியருக்கு கற்பிற் புணர்ச்சியை மறவாமல் எப்போதும் வாறி வழங்கும் திருப்பரங்குன்றம் என்று தலைவன் தலைவிக்கு எடுத்துரைப்பதாக உள்ளது.

“இனி மணல் வையை இரும் பொழிலும் குன்றப்

பனி பொழி சாரலும் பார்ப்பாரும்” (பரி. 51 - 52)

இவ்வடிகள் தலைவன் இனிய மணலுடைய வையை மீதும், திருப்பரங்குன்றின் மீதும் ஆணையிடுகிறான் என்பதற்கு அடையாக வந்துள்ளது.

“- நாற்றம்

கனியின் மலரின் மலர்கால் சீப்பு இன்னது" (பரி. 53 - 54)

தலைவன் மீது வீசும் மணம் திருப்பரங்குன்றத்தின் மலை மீதுள்ள மலர்கள், கனிகளின் மணத்திற்கு அடையாகக் கூறப்பட்டுள்ளது.

"ஈன்றாட்கு ஒரு பெண், இவள்" (பரி. 58)

தலைவி, தலைவியின் தாய்க்கு ஒரே மகள் என்பதற்கு இவ்வடி அடையாக வந்துள்ளது.

"இருள்மை ஈர் உண்கண் இலங்குஇழை ஈன்றாட்டு" (பரி. 59)

இருள் பொன்ற நிறமுடைய கரிய கண்களையும் விளங்குகின்ற அணிகலன்களையும் உடையவள் என்பதற்கு இவ்வடி அடையாக இடம்பெற்றுள்ளது.

"விறல் வேய்யோன் ஊர்மயில் வேல்நிழல் நோக்கி" (பரி. 67)

வேலையும், மயிலையும் வெற்றியையும் உடைய முருகன் என்று முருகனுக்கு இவ்வடி அடையாக உள்ளது.

"கயவாய நெய்தல் அலர், கமழ் முகை மணநகை
நயவரு நறவு இதழ், மதர் உண்கண், வாள்நுதல்
முகை முல்லை வென்று எழில் முத்து ஏய்க்கும் வெண்பல்" (பரி. 74 - 76)

குளத்தில் மலர்ந்துள்ள நெய்தற் பூக்கள், நறவ மலர் பொன்ற கண்கள், ஒளிபொருந்திய நெற்றி, வெண்மையான பற்களையும் உடையவள் தலைவி என்பதற்கு இவ்வடிகள் அடைகளாக வந்துள்ளன.

"வளி பொரு சேண் சிமை வரையகத்தால்
தளி பெருகும் தன் சினைய
பொழில் கொளக் குறையா மலர
குளிர் பொய்கை அளறு நிறைய
மருதம் நளிமணல் ஞெமர்ந்த
நனிமலர்ப் பெருவழி" (பரி. 90 - 95)

உயர்ந்த சிகரங்களை உடைய மலையில் பெய்த மழையில், குளிர்ச்சி பொருந்திய கிளைகளையுடைய பூஞ்சோலைகள், மிகுதியான மலர்கள், மருத நிலத்தின் இடையே செறிந்த மணல் பரப்பு முதலியவை திருப்பரங்குன்றத்திற்கும் மதுரைக்கும் இடையே உள்ள பெரிய அடிக்கு இவ்வடிகள் அடைகளாக வந்துள்ளன.

"சீறிடியவர் சாறு கொள எழுந்து
வேறுபடு சாந்தமும் வீறுபடு புகையும்
ஆறுசெல் வளியின் அவியா விளக்கமும்
நாறு கமல் வீயும், கூறும் இசை முழவமும்
மணியும், கயிறும், மயிலும், குடாரியும்

பிணிமுகம், உளப்படப் பிறவும் ஏந்தி

அருவரைச் சேராத் தொழுநர்" (பரி. 96 - 102)

என்று முருகப் பெருமானிற்குத் திருவிழா நடத்த வேண்டும் என்று செல்லும் அடியவர்கள் பல்வேறு நிறமுடைய மணக்குழம்புகளையும், பெருமையுடைய புகைப்பொருட்களையும், அடிக்கின்ற காற்றிலும் அணையாத விளக்கையும், மத்தளத்தையும், மணி, கயிறு, மயில், கோடாரி பிணிமுகம் என்னும் யானை ஊர்தி முதலியவற்றையும் கையில் ஏந்தி முருகப் பெருமானைத் தொழுதனர். முருகப்பெருமானைத் தொழுததற்கு இவ்வடிகள் அடைகளாக வந்துள்ளமையை அறியலாம்.

"கனவின் தொட்டது கை பிழையாகாது

நனவின் சேஎப்ப நின் நளி புனல் வையை

வருபுனல் அணிக என வரம் கொள்வோரும்

கருவயிறு உறுக எனக் கடம்படுவோரும்

செய்பொருள் வாய்க்க எனச் செவி சார்த்துவோரும்

ஐஅமர் அடுக என அருச்சிப் போரும்

பாடுவார்பாணிச் சீரும், ஆடுவார் அரங்கத் தாளமும்

மஞ்சு ஆடு மலை முழக்கும்

துஞ்சாக் கம்பலை" (பரி. 103 - 111)

முருகனுக்குரிய நிறைந்த நீரையுடைய வையை ஆறு புதுநீரை அர்குடன் பெறுவதாக என்று வரம் வேண்டுபவர்கள் ஒரு புறமும் எங்கள் வயிறு கருவுற்றால் அதற்குரிய நன்றிக்கடனாக இன்ன இன்ன பொருள்களை உனக்குத் தருவோம் என்று நேர்த்திக்கடன் செய்பவர் ஒரு புறமும் பொருள் தேடுவதற்காகச் சென்றுள்ள கணவன்மார்களின் தொழில் சிறப்பாக முடித்து அவர்களுக்கு நிறைய பொருள் வாய்த்திட அருள் வேண்டும் என்று வேண்டுவோர் ஒரு புறமும் போர்த்தொழில் மேல் சென்றிருக்கும் தலைவர் வெற்றி வாகை சூடி வர வேண்டும் என்று அருச்சனை செய்வோர் ஒருபுறமும் முருகனை வணங்கிப் பாடியும் கூத்தினை நிகழ்த்தும் மங்கையர் ஆடலுக்குரிய தாளமும் ஆகிய பல்வேறு இசையொலிகளைத் தவழும் திருப்பரங்குன்றில் எழும் எதிரொலியும் ஆகிய பல்வேறு முழக்கங்களும் சேர்ந்து ஒலிக்கின்றதாக உள்ளது. எனவே பரங்குன்றில் எழுகின்ற ஓசைகளுக்கு இவ்வடிகள் அடையாக வந்துள்ளமையைத் தெளிலாம்.

"பைஞ்சுனைப் பாஅய் எழு பாவையர்

ஆய்இதழ் உண்கண் அலர்முகத் தாமரை

தாட் தாமரை தோட் தமனியக் கயமலர்

எம்கைப் பதுமம் கொங்கைக் கயமுகை

செவ்வாய் ஆம்பல் செல்நீர்த் தாமரை

புனற் தாமரையொடு புலம் வேறுபாடுறாக்

கூர் எயிற்றார் குவிமுலைப் பூணொடு
மாரன் ஒப்பார் மார்பு அணி கலவி
அரிவையர் அமிர்த பானம்" (பரி. 112 - 123)

என்று பசிய சுனையில் பாய்ந்து நீராடி எழுகின்ற பாவையராகிய மகளிரின் அழகிய இமையாகிய இதழ்களையுடைய மையுண்ட கண்களுக்குத் தாமரை மலரும், முகம், கால்கள், தோள்கள், கைகள் முதலியவற்றிற்குத் தாமரை மலர் உவமையடையாகவும், மகளிர் தம் முலைகளுக்கு பெரிய தாமரை மொட்டுக்களும் அடையாக வந்துள்ளன. சிவந்த தமது வாயாகிய அரக்கின் நிற மொத்த மலரொடு கூடி இயங்கும் தன்மையுடைய தாமரைகள் சுனையில் பூத்தத் தாமரை மலர்களோடு ஒத்து காணப்பட்டது. மகளிரின் உடலுறுப்புகளான கண்கள், முகம், கால்கள், கைகள், தோள்கள், கொங்கைகள் முதலியவற்றிற்குத் தாமரை மலர் (118-119) உவமையைடைகளாக இடம்பெற்றுள்ளமையை அறியலாம்.

கூரிய பல்லினையுடைய மகளிருடைய குவிந்த முலைகளில் அணிகலன்கள், மன்மதனை ஒத்தவராகிய கணவர்களின் மார்பிலணிந்த அணிகள் என்று இவ்விரண்டு அணிகலன்களும் மயங்கின என்று மகளிருக்கு அடைகளாக வந்துள்ளமை அறியலாம்,

"என ஆங்கு
உடம் புணர் காதலரும் அல்லாரும் கூடி
கடம்பு அமர் செல்வன் கடிநகர் பேண
மறுமிடற்று அண்ணற்கு மாசிலோள் தந்த
நெறி நீர் அருவி அசும்பு உறு செல்வம்
மண் பரிய வானம் வறப்பினும், மன்னுகமா
தண் பரங்குன்றம் நினக்கு" (பரி. 124 - 130)

என்று இன்பத்தினைத் தரும் குளிர்ச்சி நிறைந்த திருப்பரங்குன்றத்தில் காதல் மிக்க மகளிர், ஆடவர் அல்லாத பிறராகிய வரம் வேண்டுவோர் அருச்சிப்போர் அனைவரும் ஒன்று கூடி, நஞ்சுண்ட கறைக் கண்டத்தினையுடைய சிவபெருமானும் குற்றமில்லாத உமையம்மையும் பெற்ற கடம்ப மரத்தில் விரும்பி உறையும் அருள் மிக்க முருகப் பெருமான் எழுந்தருளிய திருக்கோயிலை இன்று போல் என்றென்றும் வழிபட வேண்டும் என்றும் இம்மண்ணுலகில் வாழும் உயிர்கள் வருந்துமாறு மழை வறண்டு போனாலும் மலையிலிருந்து நெறிப்பட நீர் வீழும் அருவி இடையறாது தடையின்றி ஒழுகுவதாகிய பெருஞ்செல்வம் என்றென்றென்றும் நிலைபெற வேண்டும் என்றும் முருகனை வாழ்த்தினர். அதனைக் குறிக்கும் விதத்தில் இவ்வடிகள் அடைகளாக வந்துள்ளமையை அறியலாம்.

முடிவுரை

பரிபாடலில் உள்ள 8 வது பாடலில் 25 உரிச்சொற்களும் 22 பதிலீட்டு உரிச்சொற்களும் 128 ஒரு சொல் அடைகளும் பயின்று வந்து கவிதையாக்கத்திற்குத் துணைநிற்கின்றன. பரிபாடலில், அதிகபட்சம் 11 அடிகள் முதல் குறைந்தது ஒரு அடி வரை அடைகளாக வந்துள்ளன. 1 – 46 அடிகள் திருப்பரங்குன்றத்தின் சிறப்பினைப் பற்றித் தனித்தனி அடைகளாக வந்திருப்பினும் 46 அடிகள் ஒரு பொருண்மையைக் குறித்த அடைகளாக வந்துள்ளமையை அறியலாம். உரிச்சொற்களும் உரிச்சொற் பதிலிகளும் சமஅளவில் இடம்பெற்றிருப்பதையும் பரிபாடலில் அடைகள் அதிகமாக இடம் பெறுகின்றன என்பதையும் அறிய முடிகின்றது.

துணைநின்றவை

1. சாமிநாதையர், டாக்டர் உ.வே (உ.ஆ)., எட்டுத்தொகையுள் ஐந்தாவதாகிய பரிபாடல் மூலமும் பரிமேலழகருரையும், டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், அருண்டேல் கடற்கரைச் சாலை, பெசன்ட்நகர், சென்னை – 600 090. ஏழாம் பதிப்பு. 2010

2. சேனாவரையர், (உ.ஆ)., தொல்காப்பியம் சொல்லதிகாரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 522, டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை – 18. பதினாறாம் பதிப்பு. 2004

Reference

1. Saminathaiyar Dr.U.Ve, Ettuthogaiyul Ainthavathagiya Paripadal Mulamum Parimelazhagaruraiyum, Dr U Ve Sa Nol Nilaiyam, Chennai.
2. Senavaraiyar, Tholkappiyam Chollathikaram, Saiva Sinthantha Norpathippu Kazhagam, Chennai.

தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்

சங்கீதா,சி. “பரிபாடல் கவிதையாக்கத்தில் உரிச்சொற்கள்” புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 1, இதழ் 1, ஏப்ரல் 2021, பக். 48-57

Cite this Article in English

Sangeetha, C. “ The Usage of Adjectives to form Poetry Paripadal ” Pulam: International Journal of Tamilology Studies, Vol.1 Issue 1, April 2021, pp. 48-57